ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௯. ஆங்கிரஸஹு கார்த்திகைமீ பகுதி ௧௧.
Vol. 9. November & December 32. **No. 11.**

(மதுரை ஸ்ரீவைஷ்ணவ)
ஸத் ஸம்ப்ரதாய ஸபையின் முதல் வருஷோத்ஸவம்.

———::———

நிகழும் ஆங்கிரஸஹு கார்த்திகைமீ 4, 5௳ (1932ஹு நவம்பர்மீ 19, 20௳) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இச்சபையின் முதல் வருஷோத்ஸவம், சேதுபதி ஹைஸ்கூலில் ஸ்ரீ உ. வே. T.S. இராமஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி (B.A., B.L.) அக்ராஸநாதிபத்தியத்தில் இனிது நடைபெற்றது. அப்பொழுது ராவ்சாஹிப் ஸ்ரீ உ.வே. R. நரசிம்மையங்கார் ஸ்வாமி, 'இப்பொழுது நிகழும் ஸபைக்கு இருமைச்செல்வமும் நிறைவுற்ற ஸ்ரீ உ. வே. T. S. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி அக்ராஸநம் வஹிக்க ஒப்புக்கொண்டதும் நமது பாக்யமே; ஸம்ப்ரதாய வித்தையிற்றெளிவுற்ற இப்பெரியார் ஸத்ஸம்ப்ரதாயஸபைக்கு நிரந்தர அக்ராஸநராயிருப்பதோடு, இப்பெருந் திருவிழாவிற்கும் தலைவராய் அமையப்பெற்றது போற்றத்தக்கதே' என்று அக்ராஸநரை வரவேற்றனர். அதன்பின்னர் ஸ்ரீ உ. வே. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி (B.A., B.L.) ஆமோதித்தார். மேலும் இவர், ஞானவிளக்கமுண்டாவதற்கு இத்தகைய ஸபை இன்றியமையாததாகுமென்பதைச் சுருக்கச் சொல்லல் என்னும் அழகுபட உபந்யஸித்தார்.

அதன் பின்னர் அக்ராஸநர் ஆஸநத்திலமர்ந்து முன்னுரை சொல்லத் தொடங்கினர்.—இந்த மஹா ஸபையை நிர்வஹிப்பதற்குரிய சாமர்த்தியம் எனக்கில்லை; வருஷக்கொண்டாட்டத்தை விரைவில நடத்தவேண்டுமென்ற கருத்தால், தக்கவர்களை ஆராய்ந்து இந்த ஸ்தானத்தில் அமர்த்துவதற்குப் போதிய அவகாசம் ஸபையார்கட்கு நேராதுபோயிற்று. அதனால் இந்த ஸ்தானத்தை யான் வஹிக்கும்படி நேர்ந்தது. மேலும் "பயனன்றாகினும் பாங்கலராகினும் செயல் நன்றாகத்திருத்திபபணி" கொள்வது பெரியாரது இயல்பாதலால், இதில் எவ்வகையாலாவது ஓர் ஸம்பந்தம்பெற்றால் உஜ்ஜீவிப்பதற்கேதுவாயிருக்குமென்ற கருததாலும், இப் பதவியை வஹிததேன்; என்று உபந்யஸித்தார்.

பின்னர், ஸபைக் காரியதரிசி வக்கீல் ஸ்ரீ உ. வே. S. சுந்தரராஜய்யங்காரவர்கள் ஸபையின் அறிக்கைப்பத்திரம் வாசித்தார். அதில் இதுவரை இச்சபை செய்துவந்த வேலைகளும், நிரந்தர விதிகளும் குறிப்பிடப் பெறறுள்ளன. பலதுறைகளிலும் முயன்று வஸித்தாந்தத்தை விர்த்தி செய்ய வேண்டுமென்பதில இச்சபை குறிப்புடையதாயிருப்பது பாராட்டத்தக்கது.

அதன்பிறகு ஸ்ரீ உ. வே. அண்ணங்காராசார்யஸ்வாமி "ஜீவேசுவரஸம்பந்தம்" என்ற விஷயத்தைக் குறித்து உபந்யஸித்தார் அதன் சுருக்கம் ஈண்டுக்குறிப்பிடப்பெறுகிறது— ஜீவேசுவரஸம்பந்தமென்பது ஜீவர்கட்கும் ஈசுவரனுக்கும் இயல்பாகவே அமைந்துள்ள ஸம்பந்தம் என்றவாறு. ஈசுவரனாவான ஸமஸ்த ஐசுவரியத்தையுமுடையவன். "பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும், அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற அவனிமுழுதாள்கின்ற" என்றபடி ஸமஸ்த லோகங்களையும் ஆட்சிபுரியும் ஒத்தாரும மிக்காரும் இல்லாதவன். ஸமஸ்தலோகங்களையும இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவை: நித்யவிபூதி, லீலாவிபூதியென்பன. ஜீவர்கள்—நித்யராய் ஜ்ஞானானந்தஸ்வரூபராய் சேஷத்வமுதலிய பல லக்ஷணமுடையவராயிருப்பர். இவர்களும் லீலாவிபூதியில் வாழ்வாரும் நித்யவிபூதியில் வாழ்வாருமென இரண்டு பகுதியினராவர். நித்யவிபூதியில் வாழ்பவர்கள் ஓர் குறைவில்லாத பூரணஜ்ஞானானந்த

முடையவராய் விளங்குவர். லீலாவிபூதியிலுள்ளவர்கள் சங்கோச ஜ்ஞானமுடையவராயிருப்பர். நித்ய விபூதியில் நித்யமுக்தர்கள் தன்னைச்சூழ்ந்திருக்தேத்த தன்பெருமை தோற்ற ஸர்வேச்வரன் வீற்றிருந்தானேனும், அவ்விருப்பில் தனக்கு இனிமை தோற்றாது தேசாந்தரகதனான தன் புத்ரனிடத்துப் பிதாவுடைய ஹ்ருதயம் செல்லுமாப்போலே லீலாவிபூதியிலுள்ளாரை ஈடேற்றும் வகை யெப்படி? என்று அவன் திருவுள்ளங்குடிகொண்டிருக்கும். இந்த லீலாவிபூதியில் வாழ்பவர்கள் பரமார்த்தத்தையறிந்து உய்வதற்காக "கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருடானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள்செய்து நீண்ட." என்றபடி ஸர்வேச்வரன் வேதங்களையும் வேதார்த்தங்களையும் வெளியிட்டருளினான்.

பாரத்வாச மஹரிஷியானவர் 300 வருடம் வரை வேதங்களை அப்யஸித்துவந்தபொழுது இந்திரன் ப்ரத்யக்ஷமாயினன். அப்பொழுது இந்திரன் மஹரிஷியை நோக்கி, 'இன்னும் உமக்கு 100 வருடம் ஆயுளைக்கொடுக்கிறேன்; இவ்வாயுட்காலத்தை எவ்வகையாகக் கழிக்கப்போகிறீர்' என்று வினவினன். அதற்கு அவர் இதுவரை யான் மூன்றுவேதங்களையும் நன்றாய் அப்யஸித்தேன்; இனி நான்காவது வேதத்தை ஆராய்வதில் இவ்வாயுட்காலத்தைப் போக்குவேன்' என்றனர். அதற்கு இந்திரன் இவர் வேதத்தில் அறிந்துகொண்ட அம்சம் அல்பம் என்பதை விளக்க, இமயம்முதலிய மூன்று மலையைக்காட்டி அவற்றில் ஒவ்வொன்றிலும் பிடிமண் எடுத்து நீர் 300 வருடம்வரை கற்றவேதம மூன்று முஷ்டியாகும்; இனி அறிந்து கொள்ளவேண்டிய விஷயம் மலைபோலிருக்கும்; அதனை முழுமையும் அறிவது உம்மால் அருமையாகும் என்று நவின்றனன். இதனால் வேதம் அனந்தமென்பது தெளிவாகும். இந்த வேதங்கட்கெல்லாம் அகாரமே வித்தாயிருக்கும். இந்த வித்தில் நின்றும் வெளியான சாஸ்திரமெல்லாம் பகவதாக்ஞாரூபங்களாம். இங்ஙனமே கூரத்தாழ்வானும், 'ஸ்ரீவைகுண்டஸ்தவ' த்தில் அருளிச்செய்துள்ளார். இத்தகைய பகவதாக்ஞாரூபமான வேதத்தில் மிக்க அன்பிருந்தாலன்றி வேதார்த்தம் நெஞ்சிற் படாது.

*வேதத்தில் நம்பிக்கையற்றவர்கள் அதற்கு துரர்த்தத்தைச்செய்து விதண்டை செய்வார்கள். இந்த வேதத்தைக்காட்டிலும் சிறந்த பிரமாணம் வேறில்லை. இதுவரையிலும் வேதத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தது யாதெனின்;—இந்த வேதத்தைக் கைக்கொண்டு தான் ஜீவேசுவர சம்பந்தத்தையறிந்து கொள்ள வேண்டுமென்பது பற்றியென்க.

ஸம்பந்தஜ்ஞானம் உண்டானாலன்றி எளிதில் உஜ்ஜீவிக்க வழியில்லை. இதனை நம்பிள்ளை "அடங்கெழில் சம்பத்து" என்ற திருவாய்மொழி வ்யாக்யானத்தில் ஒருவரலாற்று முறையில் வெளியிட்டார். அது வருமாறு:—ஒரு வியாபாரியானவன் நெடுநாளாக பொருளீட்டுவதிலே கருத்தைச்செலுத்திவந்தான். ஆசையின்மிகுதியால் த்வீபாந்தரம்சென்றும் பொருளீட்டவேண்டுமென்று கருதித் தன் மனைவி கர்ப்பிணியாயிருப்பதையும் பொருட்படுத்தாது சென்றான். நாட்பல கழிந்தன. வணிகன் மனைவியும் ஆண்மகவைப் பெற்று வளர்த்துவந்தாள். அவனுக்கு யௌவன வயது வந்துற்றவுடன் தன்குலதர்மமாகிய வாணிபத்தைக் கைக்கொண்டிருந்தான். ஒருநாள் இவன் ஓர் வ்யாபார ஸ்தலம் சென்று அங்கோரிடத்தில் தன் சரக்குகளை அமைத்து வைத்திருந்தான். அப்பொழுது த்வீபாந்தரம் சென்றிருந்த இவன் தந்தையாகிய வியாபாரியும் அவ்விடம் வந்து தன் சரக்கு வைப்பதற்கு வேறிடமிலலாது தனயன் வைத்தி

---

* திருதராஷ்ட்ரன் சஞ்சயரை நோக்கி, 'சஞ்சயரே! உம்முடன் யானுஞ் சேர்ந்துவாசித்தேன்; உமக்கு மாத்திரம் ஆசிரியர் மிகுதியாகக் கற்பித்துக் கொடுத்திருப்பாரென்று கருதுவதற்குமிடமில்லை; யான் அரசனாயிருக்கிறபடியால் எனக்கேதான் ஆசிரியரும் சொல்லிக்கொடுத்திருக்க வேண்டும், அங்ஙனமிருக்க, இப்பொழுது என் மனமிருண்டு உம்மிடத்திற்கேட்டுத் தெளியும்படியான நிலைமையிலிருக்கின்றேனே; இதற்குக் காரணம் யாது? என்று வினவினன். அதற்குச் சஞ்சயர், 'நீர் வஞ்சனையுற்ற மனத்தினராயிருக்கின்றீராதலால் உண்மையான பொருள் உம்முடைய மனதிற்படவில்லை. என் மனம் அங்ஙனமில்லையாதலால் உமக்கெடுத்துரைக்குந் தெளிவுடையவனாயிருக்கிறேன்' என்றுரைத்தார். இதனால் வஞ்சனையுடைய நெஞ்சினர்க்கு வேதப்பொருள் இனிது விளங்காதென்பது தெளிவாகும்.

ருக்குமிடத்து வைத்தனன். அப்பொழுது அவன் எனக்குரிமையான இடத்தில் நீ எவ்வாறு வைக்கலாமென்று வாதிட்டான். இருவருக்கும் பெரும் பூசல் உண்டாயிற்று. அதுசமயம் இருவரின் முறை அறிந்தானொருவன் வந்து, 'நீங்களிருவீரும் பூசலினின்றும் ஒழிவீர்கள்; நீங்களிருவரும் பிதா புத்ர முறையுடையீர்கள்,' என்று சம்பந்தத்தை உணர்த்தினன். அவ்விருவரும், 'அந்தோ! நாமிருவேமும் இன்ன சம்பந்தமுடையோ மென்றறிந்திருப்போமாகில் எல்லா சாக்குகளையும் ஒன்றுய்ச்சேர்த்துக்கூடியிருந்து நல்ல வியாபாரம் செய்திருக்கலாம்; என்செய்வது' என்றுகழிவிரக்கங்கொண்டனர். அதுபோல ஈசுவரனுக்கும் நமக்கும் உண்டான சம்பந்தத்தை ஓர் ஆசிரியன் அறிவிக்க அறிந்தால் இந்த ஒழிக்க ஒழியாத சம்பந்தத்தை நெடுநாளாக அறியாதொழிந்தோமேயென்று கழிந்த நாளைக்குக் கவலைப்படும்படி நேருமன்றே. எளிதில் உஜ்ஜீவிப்பதற்கும் ஸம்பந்தஜ்ஞாநமே சிறந்த சாதனமாகும்.

ஈசுவரனுக்கும் நமக்குமுள்ள சம்பந்தம் ஒன்பது வகையாகும். அவை: பிதா புத்ர ஸம்பந்தம், ரக்ஷ்ய ரக்ஷக ஸம்பந்தம், சேஷ சேஷி ஸம்பந்தம், பர்த்ரு பார்யா ஸம்பந்தம், ஜ்ஞாத்ரு ஜ்ஞேய ஸம்பந்தம், ஸ்வ ஸ்வாமி ஸம்பந்தம், சரீர சரீரி ஸம்பந்தம், ஆதார ஆதேய ஸம்பந்தம், போக்த்ரு போக்ய ஸம்பந்தம், என்பன. இவை திருவஷ்டாக்ஷர மந்திரத்தில் தெளிவாகக் காணலாம். அகாரத்தால் பிதாபுத்ர ஸம்பந்தமும், அவ ரக்ஷணே என்கிற தாதுவால் ரக்ஷ்ய ரக்ஷக ஸம்பந்தமும், லுப்த சதுர்த்தியால் (தொக்குநின்ற நான்காம் வேற்றுமையால்) சேஷ சேஷி ஸம்பந்தமும், மகாரத்தாலே ஜ்ஞாத்ரு ஜ்ஞேய ஸம்பந்தமும், நமஸ்ஸாலே ஸ்வ ஸ்வாமி ஸம்பந்தமும், நாராயணபதத்தாலே சரீரசரீரி ஸம்பந்தமும், அயன பதத்தாலே ஆதார ஆதேய ஸம்பந்தமும், ஆயபதத்தாலே போக்த்ரு போக்ய ஸம்பந்தமும் வெளியாயின. மேலும் இதற்கு வேண்டிய உபபத்திகள் வேத முதலியவற்றில் எடுத்துக்காட்டி பூர்த்தி செய்தார்.

இன்னும் அர்த்த பஞ்சக விஷயத்தைக்குறித்தும் இவரே உபந்யஸித்தார். அதன் சுருக்கம் வருமாறு.--அர்த்த பஞ்சக

மாவன: ஆத்ம ஸ்வரூபம், ஈசுவர ஸ்வரூபம், உபாய ஸ்வரூபம், விரோதிஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம் என்பன. எல்லாவேதங்களும் வேதவித்துக்களும் ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களும் மற்றுமுள்ளவைகளும் முடிவாக இவ்வர்த்த பஞ்சகத்தையே சொல்கின்றன. திருமந்த்ரத்தில் அகாரத்தால் ஈசுவரஸ்வரூபமும், மகாரத்தால் ஜீவஸ்வரூபமும், நமப்பதத்தால் உபாய விரோதி ஸ்வரூபங்களும் ஆய என்ற சதுர்த்தியால் புருஷார்த்த ஸ்வரூபமும் குறிப்பிடப்பட்டன. மேலும் இவ்விஷயத்திற்கு வேண்டிய ப்ரமாணங்கள் எடுத்தோதி ஸபையோர் ஹ்ருதயம் களிகூர உபந்யஸித்து முடித்தார்.

அதன்பிறகு காண்டூர் ஸ்ரீ உ. வே. வித்வான் ராமாநுஜாசார்ய ஸ்வாமி "ஸ்ரீராமாயண தத்வம்" என்பதைக் குறித்து உபந்யஸித்தார். அதன் ஸாராம்சம் வருமாறு.—இந்த ஸ்ரீராமாயணம் என்ற இதிஹாஸம் ருக்வேதத்திலும் ப்ரஸ்தாபிக்கப்பட்டுளது. வேறு பல புராணாந்தரங்களிலும் இதன் பெருமை குறிப்பிடப்படுகிறது. பல இதிஹாஸங்களிலும் இதுவே சிறந்தது. இது, காயத்திரி சங்க்யையில் அமைந்துளது. இதில் எல்லா உபநிஷத் ஸாரங்களும் அடங்கியுள்ளன. சாமான்ய தர்மம், விசேஷதர்மம், ராஜதர்மம், பாகவத தர்மம் முதலிய எல்லாம் இதில் அடங்கியுள்ளன. எல்லாக் காண்டங்களிலும் சரணாகததர்மமே குறிப்பிடப்படுகிறது. ஆதலால் நம் பூர்வாசார்யர்கள் இதனைச்சரணாகதசாஸ்த்ரம் என்றே அருளிச்செய்வார்கள். அரிய பல தத்வார்த்தங்களை யறியவிரும்புவாரெல்லாம் இதிற்கண்டு தெளியலாம்.

இதனிற்க, சக்கரவர்த்தித்திருமகன் திருவவதரித்ததிருநக்ஷத்ர முதலியவற்றுக்கு ஒவ்வொரு விசேஷார்த்தம் சொல்லி வருகிற முறையில் நவமிதிதியில் அவதரித்ததற்கு விசேஷார்த்தம் உரைத்தனர். அது வருமாறு—ஒன்பது ஒன்பதாக எதனை ஒன்பதைப் பெருக்கினும், ஒன்பது லக்கம் மாருமலிருக்கும். மற்ற எண்கள் அப்படி வாரது. ஓர் ஒன்பது 9. ஈரொன்பது 18, எட்டும்ஒன்றும் 9. மூவொன்பது 27, ஏழும் இரண்டும் 9. இவ்வாறே பெருக்கிப்பெருக்கிய இலக்கத்தை ஒன்றோடொன்று கூட்டினுல் ஒன்பது

என்ற எண் மாயாது நிற்கும். முடிவில்லாத ஸர்வேசுவரன் வந்து அவதரித்தானென்பதற்கு இந்த நவமிதிதியில் வந்து தோன்றியதே அறிகுறியாகும். மேலும், எடுத்துக்கொண்ட விஷயத்திற்கேற்ப பல திருஷ்டாந்தங்கள் கூறி பூர்த்திசெய்தனர்.

பின்னர் இவரே பஞ்சசம்ஸ்காரத்தைக்குறித்தும் உபந்யஸித்தார். அதன் ஸாராம்சம் வருமாறு.—வைஷ்ணவரென்பாரனைவரும் இந்த ஸம்ஸ்காரத்தைப் பெறுவதற்குக் கடமைப்பட்டவராவார். வைஷ்ணவ சமயம் சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம், ஆகமம், தர்மசாஸ்திரம், என்ற ஆறு அரணால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. தர்மசாஸ்திரங்களும் பல உள்ளன. யாக்ஞவல்கியர், மனு, அத்ரி, முதலானவர்கள் தர்மசாஸ்திர ப்ரவாத்தகராவார்கள். ஆரியஸ்மிருதி புனுவில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் பரமைகாந்திகளுக்குரிய இந்த பஞ்ச சம்ஸ்காரம் குறிப்பிடப்பெற்றுளது. பஞ்ச சம்ஸ்காரமாவன: தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம்,யாகம் என்பன. அவற்றுள் தாபமாவது—ஹோமத்தீயில் தப்தம்செய்த சங்க சக்கரங்களைத் தோள்மூலங்களில் தரித்துக்கொள்வதாம். புண்ட்ரமாவது—ஊர்த்வபுண்ட்ரத்தை யணிந்துகொள்வதாம். நாமமாவது—பண்டைக்குலம்பற்றி வந்த பெயரை யொழித்துப் பகவத் பாகவதாசார்யர்களின் பெயரைப்பெறுவதாம். மந்த்ரமாவது—திருமந்த்ர உபதேசமாம். யாகமாவது—திருவாராதனமாம். கற்புடைமகளிர்க்கு மாங்கல்யாதி தாரணம் போல ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இந்த ஸம்ஸ்காரம் இன்றியமையாததாகும். வைகானச பாஞ்சராத்ர ஆகமங்களில் இந்த ஸம்ஸ்கார விசேஷங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பஞ்ச ஸம்ஸ்கார ஸம்பந்நர் எல்லாயுகங்களிலும் இருந்தனர். கண்ணுவமஹரிஷி சகுந்தலைபின் புதல்வனை பரதனுக்கு பஞ்சசம்ஸ்காரம் செய்தார். வீமன் பாரிஜாதமலர் கொண்டு வருவதற்காகப் போந்த காலத்தில் அநுமானைச சந்தித்தான். அப்பொழுது அநுமான் பலவிஷயங்களை பீமனுக்கு உரைத்துவருகின்றபொழுது இந்தப் பஞ்ச ஸம்ஸ்காரத்தைப் பற்றியும் பிரஸ்தாபித்தனர். சிஷ்டர்களாகிய பெரியோர்களால் இந்த ஸம்ஸ்காரம் அங்கிகரிக்கப்பட்டபடியால் வைஷ்ணவரனைவரும் பஞ்ச

ஸம்ஸ்கார ஸம்பந்நராய் விளங்கவேண்டியது இன்றியமையாததாம் இதற்கு வேண்டிய உபபத்திகள் கூறி பூர்த்திசெய்தார்.

அதன்பிறகு ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ உ. வே. வித்வான் மேல வாத்தியார் திருமலை அய்யங்கார் ஸ்வாமி பாகவத வைபவத்தைக் குறித்து உபந்யஸித்தார். அதன் ஸாராம்சம் வருமாறு —

பகவத் ஸம்பந்தமுடையார் பாகவதர். லக்ஷணையாக ஸம்பந்த ஞானமுடையவர்களைக் குறிப்பிடும். ஜ்ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீர்யம், தேஜஸ் என்ற ஆறு குணங்களையுடையவனெவனோ அவன் பகவானாவான். அவனுடைய குணங்களுக்குத் தோற்றுப் பக்தியுடையவராயிருப்பார் பாகவதராவார். இவரது பெருமை பகவானாலும் சொல்வதற்கருமையாகும். இவர்கள் திருமந்த்ரார்த்த நிஷ்டையுடையவராயிருப்பர் என்று பிரஸ்தாபித்துக்கொண்டு திருமந்த்ரார்த்தத்தை விரிவாக எடுத்திசைத்தார். பின்னர் "ஸ்வபுருஷம்" என்ற யமகிங்கர ஸம்வாதத்தைக் குறிப்பிடுகிறசுலோகத்தால்பாகவதவைபவம் குறிப்பிடப்படுகிறதென்றும், இதனையே திருமழிசைப்பிரான் "திறம்பேல்மின்" என்ற பாசுரத்தால் அருளிச்செய்தாரென்றும், பாகவதர்கள் தேவ மனுஷ்ய திர்யக் வகைகளிலும் உண்டென்றும், விவரித்தார். மேலும், இதற்கு உபயுக்தாம்சங்களை ப்ரமாணபூர்வகமாக உபந்யஸித்து முடித்தார்.

அதன் பிறகு இராமநாதபுரம் ஸேது ஸம்ஸ்தான மஹா வித்வான் ஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்கார்ஸ்வாமி இராமாவதாரம் என்பதைக்குறித்து உபந்யஸித்தார். அதன் ஸாராம்சம் வருமாறு.—

"படிகொண்டகீர்த்தி இராமாயண" மென்றபடி அளவிட முடியாத பெருமையுடையது. அவதாரமென்றால் மேலேயிருந்து கீழே இறங்குவது, அவதார சப்தம் ஒப்புயர்வற்றவனுடைய பிறப்பையே குறிப்பிடும். சில பெரியோர்கள் அவதாரத்தைப் பரத்வமாக பாராட்டினார்கள். எந்த அவதாரத்திலும் பரத்வ ஸௌலப்யங்கள் கலந்திருக்கும். லோகத்தில் தசரதன் பிள்ளை ராமன் என்று

பாராட்டுகிறார்கள். வால்மீகி வெளியிட்டிருப்பது வேத வேதாந்தங்களை யடக்கிக்கொண்டிருக்கிறது. உலகுக்குக்காரணம் மூன்று. காரணம் அவனானபோது செய்கிற காரியம் ஜீவாத்மா வுடையது என்கிறோம். அது சேரவில்லை. எல்லாக் காரியத்துக் கும் மூலம் ஈசுவரன். "எத்தவம் செய்வார்க்கும் அருள்முடிவது ஆழியான்பால்" என்றார். இக்கருத்து வடநூலார்க்கும் உண்டு. தசரதன் தெய்வத்தன்மையோடு நாட்டையாண்டான். மிகுந்த பக்தியுடையவன். அவன் புத்திரப்பேறில்லாமல் அதன்பொருட்டு தபசை யநுஷ்டித்தான். அதறகுப் பயனில்லை. வேண்டிய வேண் டியாங்கெய்ததத்தக்கது தவம். வால்மீகி அது இல்லையென்றார். தசரதனுக்குத் தபசு கைகூடவில்லையென்றால் அதில் யாருக்கு நம்பிக்கையுண்டு. அதை ஆராயவேண்டியது அவசியம். தபசால் முடியாததைத் தசரதன் வசிஷ்டரிடம தெரிவித்தபோது அவர் யாகத்தைச்செய் அடையலாமென்றார். அதற்கு அசுவமேத யாகம் செய்ய நினைத்து அநதப்புரம சென்றான. அது சமயம் சுமந்திரன பூர்வம் சனதகுமாரா சொலலிய விருத்தாநதத்தைத் தான கேட்டிருந்ததாயும், அநதப்படி ரிஷ்யசிருஙகரை வரவழைத்து யாகம்செய்ய வேணடுமெனவும் கூற, அவனும் அபபடியே அவரை வரவழைத்து யாகம்செய்ய அது முடிந்தும புதது உண்டாகவில்லை. பின் அரசன் வருநத ரிஷ்யசிருஙகர புத்திரகாமேஷ்டி ஓனறு செயதால் புத்ரனுணடாமெனறு சொலலி அதைசசெய்தார். பின எமபெருமான இசசையால் தாமே தசரதனுக்குப புதலவனாக அவதரித்தான். எமபெருமான ஒருவனால பிறபபிக்கபபட்டவ னல்லன். எல்லாரும் பிறப்பதுபோலலல அவன் பிறப்பு. பரிபாட லில் "பிறந்த பிறப்பில்லை பிறப்பிதத்தாரில்லை" எனறார். அவதார ரஹஸ்யம தெரிநதால் பிறவாத நிலையைக்கொடுக்கிறான. மனுஷ்ய யத்னமும் ஈசுவர அபிப்பிராயமும் சேரவேண்டும். இதில் சேதனன் முயற்சி அப்ரதானம். ஸத் ஸம்ப்ரதாயமாகிய திறவுகோலால்தான்

தெரியவேண்டும். கீதையில் ஒருவன் ஒரு பிள்ளையைத் தன் முயற்சியால் உண்டுபண்ணமுடியாதென வெளியிட்டான். எனப் பல திருஷ்டாந்தங்களால் விளக்கி இனிது உபந்யஸித்தார்.

அக்ராசனர் முடிவுரை கூறியபின்பு, ராவ் சாஹிப், ஸ்ரீமாந், R. நரஸிம்மையங்கார் ஸ்வாமி அவர்களால் உபந்யாஸகர்களுக்கும் அக்ராஸநாதிபதியவர்களுக்கும் வந்தனோபசாரம்கூறப்பட்டு, சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு ஸபை இனிது நிறைவேறிற்று.

ஸ்ரீ

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து.

(100-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டவுலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூற

இனிவுலகிற்குத்தலைவன் ஆதிபகவனென உலகுஉடைமையாகவும், ஆதிபகவன் உடையானாகவும் கூறுதலின்றி, உலகு உடையதாகவும், ஆதிபகவன் உடைமையாகவும் மாறுபடக்கூறியதென்னை? என்று சங்கித்து அதற்கு உத்தரங்கூறும் வாயிலாகப் பிரமாண நிர்த்தேசமும் செய்கிறார்.—காணப்பட்ட முதலியவாக்கியங்களால்.

காணப்பட்டவுலகத்தால் என்றது பிரத்யக்ஷ விஷயமான காரியரூப உலகத்தால் என்றவாறு. காணப்படாத கடவுளுக்கு உண்மை கூற வேண்டுதலின் என்றது அப்ரத்யக்ஷமான காரணக் கடவுளின் சித்தியைச்செய்ய வேண்டுதலின் என்றவாறு.

ஆதிபகவன் முதற்றேயென உலகின்மேல் வைத்துக்கூறினர்; கூறினரேனும் உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க என்றது உலகு ஆதிபகவனாகிய காரணத்தையுடையது என்று உலகை விசேஷ்யமாகவும், ஆதிபகவனை விசேடணமாகவும் வைத்துக்கூறினர்; அங்ஙனங்கூறினும் உலகிற்குமுதல் ஆதிபகவ

வேண்டுதலின், ஆதிபகவன் முதற்றே உலகேன உலகின் மேல்

னென்று உலகு விசேடணமென்பதும், ஆதிபகவன் விசேடியமென் பதும் கருத்தாகக்கொள்க என்றவாறு.

பிரமாண நிர்த்தேசஞ் செய்தலாவது—நையாயிகர், முதலில் ஈசுவர விஷயத்தில் பிரமாணுபாவத்தைச்சங்கித்துப் பின்னால் அந்நி யத்திற் கிரஹிக்கப்பட்ட காரண காரியங்களிலுள்ள வியாப்தியைக் கொண்டு "அங்குராதிரூபங் காரியம்; கர்த்தருஜன்னியம். காரியத் துவாத். கடவத்" என்பது முதல் ஒன்பது வகையான அநுமானங் களால் ஈசுவர சித்தியைச்செய்வதுபோல, இந்நூலாசிரியரும் அநு மானப் பிரமாணத்தால் ஈசுவர சித்தியைச் செய்கிறார்; என்பது தோன்ற 'காணப்பட்டவுலகத்தால் காணப்படாத கடவுளுக்கு உண்மைகூற வேண்டுதலின்' என்றார்.

இனி, இங்குரைத்தவை விரித்துரைக்கப்பெறும்.—*மஹத் துவ விசிஷ்ட உற்பூத உருவமும், உற்பூத பரிசமுமின்மையால் ஈசு வர விஷயத்தில் பாஹ்ய பிரத்யக்ஷப் பிரமாணத்திற்குப் பிரவர்த்தி யில்லை. யான் சுகி; யான் துக்கி; என்று ஜீவாத்மாவின்பிரத்யக்ஷம் மனதாலுண்டாவதன்றிப் பரமாத்மாவின் பிரத்யக்ஷம் மனதாலுண் டாகாமையின், ஆந்தரப்பிரத்யக்ஷப் பிரமாணத்துக்கும் ஈசுவரனி டத்திற் பிரவர்த்தியில்லை.

இனி அநுமானப்பிரமாணமும் ஈசுவரனிடத்திற்சம்பவியாது. எவ்வாறெனின்;—எங்ஙனம் தூமரூபஹேதுவில் வன்னிரூப சாத் தியத்தின் வியாப்தி பிரத்யக்ஷமாமோ, அங்ஙனமே யாதாமோர் ஏதுவில் ஈசுவரரூப சாத்யத்தின் வியாப்தி பிரத்யக்ஷமாகுமாயின் அவ்வேதுவால் ஈசுவரரூப சாத்தியத்தின் அநுமான முண்டாகும். அங்ஙனம் ஒரேதுவினும் ஈசுவரனை நிரூபிக்கும் வியாப்தி பிரசித்த மில்லை.

---

* நையாயிகர், பெருமை பரிமாணத்தோடு கூடிய பிரத்யக்ஷ யோக்கிய மான உருவத்தையும், அங்ஙனமேயுள்ள பரிசத்தினையும் திரவியத்தின் பாஹ்ய பிரத்யக்ஷ ஞானத்திற்குக் காரணமென்பர்.

வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவ

அஃதாவது—தூமவன்னியின் வியபசரியாத உடனிகழ்ச்சி ஞானத்தினால் வியாப்தி பிரத்யக்ஷமுண்டாய், பின் மலையினிடத்துத் தூமத்தைக்கண்டுழி, தூமம் வன்னி வியாப்யமென்னும் வியாப்தியின் ஸ்மிருதியும், பின் வன்னி வியாப்ய தூமமுடையது பருவதமென்னும் பக்ஷதர்மதாஞானமும் உண்டாகின்றது. இவ்வாறு தூமத்தின்கணுள்ள வன்னி வியாப்தியையும், பக்ஷதர்மதையையும் விஷயஞ்செய்யும் ஞானத்தினை பராமரிசம் என்பர். இதனையே சிலர் அநுமானமென்பர். சிலர் வியாப்தியின் ஸ்மிருதி ஞானத்தினை அநுமானமென்றும், பராமரிசத்தினை வியாபாரமென்றுங் கூறுவர். எவ்வாறாயினும் அநுமானத்திற்கு வியபசரியாத ஏதுசாத்தியங்களின் உடனிகழ்ச்சிப்பிரத்யக்ஷம் காரணமாகின்றது என்பதில் விவாதமில்லை. ஆனதால் எவ்வேதுவோடும் ஈசுவரரூபசாத்தியத்தின் உடனிகழ்ச்சிப் பிரத்யக்ஷமுண்டாகாமையின் அநுமானப் பிரமாணத்துக்கும் ஈசுவரனிடத்திற் பிரவர்த்தியில்லை என்பதாம்.

இனி ஆகமப் பிரமாணமும் பிரவர்த்திக்காது. எவ்வாறெனின்;—ஆகமப்பிரமாணங்களிலுள்ள ப்ராமாண்யம் ஈசுவரனாலுண்டாக்கப்படுதற்றன்மை ரூபஹேதுவால் கிரஹிக்கப்படுகிறது. முதலில் யாதாமோர் பிரமாணத்தால் அவ்வீசுவரனது ஸித்தியுண்டாகுமாயின், பின் அவ்வீசுவரனால் உண்டாக்கப்படுதற்றன்மை ரூபஹேதுவால் ஆகமங்களில் ப்ராமாண்யஸித்தியுண்டாகும். ஆதலின் ஈசுவரனிடத்தில் ஆகமங்களும் அப்பிரமாணங்களாம்; என்று விகல்பித்துப்பின்பு அன்னியத்திற் கிரஹிக்கப்பட்ட காரண காரியங்களின் உடனிகழ்ச்சியைக்கொண்டு, அங்குரமுதலியன கர்த்தாவையுடையன; காரியமாவதால்; குடம்போல என்னும் இதுமுதலிய ஒன்பது வகையான அநுமானங்களால் ஈசுவரனது ஸித்தியைச் செய்வர்.

இங்ஙனமே திருவள்ளுவரும் உலகத்திலுள்ள காரியத்துவ ஏதுவைக்கொண்டு காரணக் கடவுளின் ஸித்தியைச்செய்வதால்,

னென்பது கருத்தாகக்கோள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது'

இம்மலை நெருப்புடைத்து என்று பிரத்யக்ஷ விஷயமான மலையை உத்தேசித்து, அப்பிரத்யக்ஷமான நெருப்பை விதிப்பதுபோல உத்தேச விதேயபாவம்பற்றி உலகு ஆதிபகவனையுடைத்து என்று கூறினர். அங்ஙனங்கூறினும் உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது பொருளாகக் கொள்க என்பதாம். இந்நூலாசிரியராற் கூறப்படும் அநுமானத்தின் வடிவம் வருமாறு.—

உலகு ஆதிபகவனாகிய காரணத்தையுடையது; காரியமாவதால்; எது எது காரியமாமோ, அது அது ஓர் காரணத்தையுடையது; எழுத்துக்கள்போல. அஃதாவது—எங்ஙனம் எழுத்துக்கள் காரியமாவதால் அகரமாகிய காரணத்தையுடையனவோ, அங்ஙனமே உலகும் காரியமாவதால் ஆதிபகவனாகிய காரணத்தையுடையது என்பதாம்.

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது என்றது ஆதிபகவன் முதற்றே என்பதின் இறுதியிலுள்ள ஏகாரம் கள்வனே இவன் என்பதிலுள்ள ஏகாரம்போல விசிஷ்டப்பொருளுணர்த்தும் பதத்தோடு கூடியதால் அயோகவியவச்சேதப்பொருளின்கண் வந்தது என்றவாறு. அஃதாவது—இவனே கள்வன் என்பதிலுள்ள ஏகாரம் இவன் என்னும் சுட்டுப்பெயரோடு கூடியதால் மற்றவன் கள்வனல்லன் என்னும் அந்நியயோகவியவச்சேதப் பொருளுணர்த்துகின்றது. கள்வனேயென்பது பெயர்மாத்திரமன்றி கள்ளத்தன்மையுடையானென்னும் பொருளுணர்த்துவதால் இவன் கள்வனில்லையென்பதில்லை யென்னும் அயோக வியவச்சேதப் பொருளுணர்த்துகின்றது. அஃதாவது—இவன் திருடன் என்பதில் ஐயமில்லையென்பதாம். இதனால் தனிப்பெயரோடு கூடியஏகாரம்அந்நியயோக வியவச்சேதப்பொருளுணர்த்துமென்பதும், யாதானுமோர் தர்மவிசிஷ்டப்பொருளுணர்த்தும் பதத்தோடு கூடிய ஏகாரமும், தனித்தர்ம மாத்திரத்தையுணர்த்தும் பதத்தோடு கூடிய ஏகாரமும் அயோக வியவச்சேதப் பொருளுணர்த்துமென்பதும் நியமமாம். இவ்விரண்டற்கும் திருஷ்டாந்தமாக இராமனே வில்லாளி.

இப்பாட்டான் முதற்கடவுளதுண்மை கூறப்பட்டது.

வில்லாளியே இராமன் என்று வடநூலார் கூறுவர். ஆனதால் ஆதிபகவன் முதற்றே என்பதிலுள்ள ஏகாரம் உலகு ஆதிபகவனாகிய முதலையுடையது என்னும் விசிஷ்டப்பொருளுணர்த்தும் பதத்தோடு கூடியதால் உலகு ஆதிபகவனாகிய காரணத்தையுடையது என்பதில் ஐயமில்லை யென்னும் அயோகவியவச்சேதப் பொருளுணர்த்துகின்றது.

இனி இவ்விடத்திற்சிலர் கூறுவதாவது—ஓரே ஏகாரம் எவ்விடத்தில் வந்தபோதிலும் முற்கூறிய இரண்டுபொருளுமுணர்த்துகின்றது என்று கூறி, அப்பொருளிற்குத் திருஷ்டாந்தமாக வந்த தாமரை செம்மையே என்று கூறுவர். வருதற்றொழிற்குச் செம்மைக்குணம் கர்த்தாவாகாமையின், வந்த தாமரை செம்மையுடையதே யென்பது பொருளாம். மேலும், வந்த தாமரையென்று வருதற்றொழிற்குத்தாமரையைக் கருத்தாவாக்கிக்கூறி அதற்குமேல் செம்மையே என்று கூறினால் குணகுணிகட்கு அபேதம் யாண்டும் அப்பிரசித்தமேயாதலின், அது செம்மையுடையதே யென்னும் பொருளன்றி வேறுபொருள் பயவாது. ஆனதால் ஈண்டும் வந்த தாமரை செம்மையுடையதென்பதில் ஐயமில்லையென்னும் அயோகவியவச்சேதப்பொருளே கொள்ளக்கிடக்கின்றது.

ஆனால் வந்த தாமரை செம்மையுடையதேயென்று பொருள் கூறினும், அது கருமையுடையதன்று வென்னும் பொருளும் பயப்பதால் அந்நிய யோகவியவச்சேதப் பொருளும் கொள்ளலாமெனின்;—இதைப்பற்றி இன்னும் சிறிது நுணுகி விசாரிக்கவேண்டும். அஃதாவது—கருமையுடையதன்றென்பதின் பொருள்—கருமையுடையதின் பேதமுடையதென்பதாம். பேதம் அன்னியோந்யாபாவரூபமாதலின், செந்தாமரையில்கருமையுடையதின் அந்நியோந்யாபாவந்தோற்றுகிறது. மேலும், வந்த தாமரை செம்மையுடையது; கருமையுடையதன்று; என்னும் இரண்டு வாக்கியங்களும் உடன்பாட்டாலும், எதிர்மறையாலும் தாமரையில் செம்மையின் சம்பந்தத்தினையே நிச்சயிக்கின்றன. சம்பந்தாபாவ நிஷேதமே (சம்

பந்த நிச்சயமே) அயோகவியவச்சேதத்தின் பொருளாதலின், இத் திருஷ்டாந்தத்திலும அயோகவியவச்சேதமே ஸித்திக்கின்றது. சங்கு வெண்மையே என்பதும் இதிலடங்கும்.

இனி, இது, செந்தாமரையே என்னும் அந்நியயோகவியவச்சேதத்தின் திருஷ்டாந்தத்தில் வெண்டாமரையன்று என்று செந் வெண்டாமரையின தாமரையில் பேதரூப அந்நியோந்யாபாவந் தோற்றுகிறது. இதுவேசெந்தாமரை எனனும திருஷ்டாந்தத்தில் மற்றையது செநதாமரையன்று என்று அந்நியதநில செந்தாமரையின் பேதரூப அந்நியோந்யாபாவம் தோற்றுகின்றது. செந்தாமரை தத்பிந்நபிந்நமென்பது இதன் பொருளாகும். இவ்விரண்டும் அந்நியயோகவியவச்சேதத்தின்பாற்படும். இவ்வாற்ருன் அயோகவியவச்சேத அந்நியயோகவியவச்சேதஙகளின பேதததை ஆராய்ந்துகொள்க. இனனும்விரிப்பிற் பெருகுமாதலின் நியாய நூல்களிற் கண்டுகொள்க. "அகரமுதல" என்னும் இத்திருக்குறளால் ஜகத்காரண வஸ்துவின ஸதபாவம் (உண்மை) கூறப்பட்டது.

தொடரும், இராகவராமாநுஜதாஸர்.

ஸ்ரீ:

காரைக்கால்

ஸ்ரீ வைஷ்ணவ ஸமாஜம்.

—)x(—

இச்சங்கம், ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாநதத்தை விர்த்தி செய்வதில் நோக்கமுடையதாய் உழைத்து வருகிறது. இச்சங்கத்தினின்றும் பல துண்டுப பத்திரிகைகள் வெளியாயிருக்கின்றன. அவை, பலருக்கும் உத்ஸாகத்தைக் கொடுக்கும் பெற்றியன. ஸ்ரீமாந். தொண்டரடிப்பொடி ராமாநுஜதாஸரென்பவரே இச் சங்கத்தின் காரியங்களை நிர்வஹித்து வருகின்றார். இவரது உழைப்பு பெரிதும் பாராட்டத் தக்கது. இவர் பல்லாண்டுகள வாழ்ந்திருந்து, மேன்மேலும் இத்தகைய காரியததைச் செய்து உபகரிக்குமாறு எமபெருமான் இன்னருள்புரிவானாக.

நிற்க, இச்சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழா நிகழும் ஆங்கிரஸஹு மாசி மீ 7, 8 (1933ஹு பிப்ரவரி மீ 18, 19) உகளில் காரைக்காலில் புனிதா நிலயத்தில் மிகவும் சிறப்பாய் நடைபெறும். அப்பொழுது அறிஞர் பலர், அரிய பெரிய விஷயங்களைக் குறித்து உபந்யஸிப்பர். எல்லோரும் வந்து கேட்டாநந்திக்குமாறு இச் சங்கத்தின் காரியதரிசி கேட்டுக் கொள்கிறார்.

மதிப்புரை.

பகவதாராதனக் கிரமம்:— இந்நூல், விசதவாக்சிகாமணியான ஸ்ரீ மணவாளமாமுனிகளால் அருளிச் செய்யப் பெற்றது. இதனை ஜீயர்படி திருவாராதனக்கிரமம் என்றும் வழங்குவர். ஆராதனக் கிரமங்களில் ஜீயர்படி விரிவுடையதாகவும், சிறப்புடையதாகவும் விளங்குமென்று ஆன்றோர் பாராட்டுவார்கள். இந்நூலிற்கு 'ஜீயர்படி விளக்கம்' என்று தெளிவுரை யெழுதப் பெற்றுள்ளது. ஸ்ரீ. உ. வே. வித்வான் திருவரங்காசார்ய ப்ரஸன்ன ஸ்ரீநிவாஸ வரதாசார்ய ஸ்வாமி யென்பவரே இவ் விளக்கத்தினை இயற்றியவராவர். இவ்விளக்கமும் இந்நூலிற்கோர் சோபையைத் தருகிறது. ஸ்ரீகாஞ்சீ பரிவாதிபயங்கரம் உ. வே. வித்வான் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் மதிப்புரையும் இந்நூற்கோர் மகுடமாய் விளங்குகிறது. ஸ்ரீமான் பட்டாபிராம முதலியாரவர்கள், எல்லோருக்கும் உபகாரமாயிருக்க வேண்டுமென்ற கருத்தால் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றார். இதுவரை பிறரொருவராலும் அச்சிடப்பெறாதது. வைஷ்ணவராயிருப்பாரனைவருக்கும் பகவதாராதனை யின்றியமையாதொன்றாதலான், அம்முறையினை நன்கு விளக்குகின்ற இந்நூலினை அன்னவரனைவரும் வாங்கிப் பயில்வதற்குக் கடமைப்பட்டவராவார். விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப்பெற்றுக்கொள்க.

விலாசம்:— பட்டாபிராமன் அன்கோ,
ஸ்ரீ வைஷ்ணவ பிரஸ், 153, தங்கசாலைத் தெரு, சென்னை.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

இச்சங்கத்தார் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த நூல்களை யாவரும் எளிதில் வாங்கப்படிப்பதற்காகக் குறைந்த விலையில் பலநூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். வைஷ்ணவ உலகிற்கு இச்சங்கத்தார்கள் செய்யும் உதவி போற்றத்தக்கதே. இதுவரையிலும் இவர்கள் வெளியிட்ட நூல்கள் கீழ்க் குறிப்பிடப் பெற்றுள்ளன. விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

	அணா		அணா
பெரியாழ்வார் திருமொழி	3	ஸ்ரீராமாயண ஸாரம்	1
பெருமாள் திருமொழி	1	ஸ்ரீமத் பகவத்கீதா ஸாரம்	1
திருப்பாவை, நாய்ச்சியார் திருமொழி	1	ஸ்ரீமத ஸித்தாந்த ஸாரம்	1
திருச்சந்த விருத்தம்	1	நித்யாநுஸந்தானம் பாக்கெட் சயிஸ்	4
திருமாலை, திருப்பள்ளி யெழுச்சி, அமலனாதி பிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு	1	திருவாய்மொழி	6
		முதலாயிரம்	6
		முதலாயிரம் கலிக்கோபைண்டு	7

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
பேரம்பூர், பாரக்ஸ் போஸ்ட், குயப்பேட்டை, சென்னை.